யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | அரசியல் விஞ்ஞானம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, தரப்பட்ட அறிவுறுத்தல் களுக்கமைய விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் புள்ளடி (X) இடுக.

❖ **01 - 15 வரையிலான வினாக்களில் மிகப் பொருத்தமான சேர்மானத்தை இனம் காண்க.**

01) அரசியல்

A - கிரேக்க காலம் வரைப் பழமை மிக்கது

B - நடைமுறைக்கலை

C - அரசியல் ரீதியாக ஒழுங்கடைத்த மானிட சமூகத்தில் அரசியல் போராட்டத்தை நடைமுறைப் படுத்தும் பிரயோகச் செயன்முறை.

D - அரசியல் வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் செயற்பாடுகளை வெளிப்படுத்துவது.

E - மனிதனின் அரசயில் நடத்தை பற்றி விபரிக்கின்றது.

(1) ABCD (2) BCDE (3) ACBE (4) ABDE (5) ABCE

02) அரசறிவியல்

A - அதிகாரம் தொடர்பான கற்கை நெறி

B - அரசு பற்றி ஆராயும் இயல்

C - அரசியல் கட்சிகளையும் அரசியல் வாதிகளையும் ஆராயும் கலை

D - அரசாங்கம் பற்றி ஆய்வு செய்யும் சமூகவிஞ்ஞானம்.

E - மோதல் முகாமை, மோதல் தீர்வு பற்றிய கற்கை.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

03) ஒப்பீட்டு அணுகுமுறை

A - கடந்தகால, நிகழ்கால அனுபவங்களை ஒப்பிடுவதன் மூலம் அரசறிவியலை ஆராய்கின்றது.

B - அரசியல் முறைமைகளையும் நிறுவனங்களையும் ஒன்றிடனொன்று ஒப்பிடுகின்றது.

C - அரசியல் முறைமைகளையும் நிறுவனங்களையும் ஒப்பிடுவதால் அவற்றிடையே மோதலைத் தோற்றுவிக்கின்றது.

D - சிறந்த அரசியல் முறையைப் பெற்றுக்கொள்ள ஆவண செய்கின்றது.

E - ஒப்பீட்டு அரசியல் கற்கைக்கு வித்திட்டுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ACBE

04) புள்ளி விபரவியல் அணுகுமுறை

A - புள்ளிவிபர ரீதியான ஆய்வின் அடிப்படையில் அரசறிவியலை ஆராய்கின்றது.

B - அரசியல் நிகழ்வுகளை புள்ளிவிபரத் தகவல் அடிப்படையில் அணுகுகின்றது.

C - உறுதியான எதிர்வு கூறலைக் கொண்டது.

D - அகநிலை சாரா புறநிலை முடிவுகளைக் கொண்டது.

E - யதார்த்தத்திற்கு அப்பால் முடிவுகளைப் பெற எத்தனிக்கின்றது.

(1) ABCD (2) ABCE (3) BCDE (4) CDEB (5) ABED



agaram.lk
Scanned with CamScanner

15) சமதர்ம அரசியல் யாப்பின் தன்மை

A - சுதந்திரமான போட்டிச் சந்தை வாய்ப்பு

B - அரசு பொருளாதாரத்தை நிர்வகித்தல்

C - கட்சி ஏகாதிபத்தியம்

D - கம்யூனிசக் கொள்கையின் அடிப்படையில் ஒழுங்கமைந்த அரசியல் நிறுவன முறை

E - பொருண்மிய அசமத்துவம்

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

❖ **16 - 25 வரையான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களில் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

16) கபினட்யாப்பு முறையின் நன்மைகள்

(1) பெயரளவு நிர்வாகம், உண்மை நிர்வாகம் கொண்டது.

(2) கட்சிமுறை அரசாங்கத்தின் செயற்பாடுகள்

(3) வலுவேறாக்கம் புறந்தள்ளப்பட்ட நிலை

(4) பாராளுமன்றத்திற்குள் சிறைப்பட்ட நிர்வாகம்.

(5) முத்தாபனங்களினதும் செயற்பாடு எத்தலையீடுகளுமற்ற சுயாதீனமானது.

17) ஜனாதிபதி யாப்பு முறையின் நன்மைகள்

(1) சட்டத்துறைக்கு புறம்பான நிர்வாகத்துறை

(2) தனிமன்ற ஆட்சி

(3) பெயரளவு நிர்வாகமும் உண்மை நிர்வாகமும் தெளிவாக வேறுபடுத்தப்பட்ட அரசாட்சி

(4) கட்சி அரசாங்கமின்மை

(5) தனிமன்ற சர்வாதிகாரத்துக்கு துணைபோகும் சந்தர்ப்பம்

18) சட்டத்துறை

(1) சட்டம் இயற்றல்.

(2) தேர்தல்களை நடாத்துதல்.

(3) பொதுநிதியைக் கட்டுப்படுத்தல்.

(4) எதிர்காலத் தலைவர்களை பயிற்றுவித்தல்.

(5) நிர்வாகத் துறையைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தல்.

19) நிர்வாகத்துறை

(1) வெளிநாடுகளுடன் உறவுகளை மேற்கொள்ளலாம்.

(2) உடன்படிக்கைகளை நிறைவேற்றல்.

(3) நியமனங்களை மேற்கொள்ளல்.

(4) சட்டமியற்றுவதில் தொடர்புபடுகின்றது.

(5) நீதிப் பணிகளில் தனது வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

20) நீதித்துறை சுதந்திரம் என்பது

(1) நீதிபதிகளை விமர்சிப்பதில் பொது மக்களுக்கு சுதந்திரம் உண்டு.

(2) நீதிபதிகள் கண்கள் மறைக்கப்பட்ட மனிதர்களாக நீதியை நிர்வகிக்க வேண்டும்.

(3) நீதித்துறை ஏனைய அரசாங்க தாபனங்களில் இருந்து சுயாதீனமாக செயற்படல்.

(4) நீதிபதிகளின் போதிய ஊதியமும் பதவிக்காலமும் உறுதிப்படுத்தப்படல்.

(5) பகிரங்கமான வழக்கு விசாரணை



agaram.lk

Scanned with CamScanner

27) ஒப்பங்கோடல்

A - ஒரு நாட்டின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் மக்கள் பங்குபற்றும் ஒரு வழி.

B - சட்டவாக்கம் செய்வோர் மீதான தடை.

C - கட்சிகளின் தான் தோன்றி தனத்தைக் குறைக்க இதை பயன்படுத்தலாம்.

D - சுவிஸ்ல் சகல அரசியலமைப்புத் திருத்தங்களும் ஒப்பம் கோடலுக்கு விடப்பட வேண்டும்.

E - பிரதிநிதித்துவங்களைத் தெரிவு செய்வதற்கு இதனைப் பயன்படுத்த முடியும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

28) அரசியல் கட்சிகள்

A - கொள்கைகளை அமுல்படுத்தும் அமைப்புக்கள்

B - ஒழுங்குபடுத்தப்படாத அபிப்பிராயங்களைக் கொண்ட நிறுவனங்கள்

C - பொது மக்களை அரசியல் முறையோடு கொண்டு செல்லும் சாதனங்கள்.

D - நவீன அரசியலின் புவியீர்ப்பு மையமாக விளங்குபவை.

E - சர்வசன வாக்குரிமை பொதுமக்கள் அபிப்பிராயம் ஜனநாயகம் போன்றவற்றின் குழந்தை

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

29) பொதுசன அபிப்பிராயம்

A - அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பின் மக்களின் கருத்து நிலை.

B - அரசியல் ரீதியான முக்கியத்துவம் மிக்க நபர்கள் மீதான பொது மக்கள் அபிப்பிராயம்

C - அது அரசாங்கம் அதன் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் சிந்திக்கும் விதத்தினை பிரதிபலிக்கின்றது.

D - அது அரசாங்கம் தனது சாதனைகளை மதிப்பீடு செய்வதற்கு உதவுகின்றது.

E - அது ஜனநாயகத்தைப் பலவீனப்படுத்துகின்றது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

agaram.lk

30) அமுக்க குழுக்கள்

A - பாதுகாத்து முன்னேற்றம் ஒழுங்மைப்புகள்.

B - அவற்றின் பன்மைத் தன்மை மேலான அரசியல் அபிவிருத்தியின் குறிகாட்டி

C - அதிகாரத்தைக் கைப்பாற்றும் நோக்கமல்ல

D - பொதுக் கொள்ளை மீது செல்வாக்குச் செலுத்த முயலும் குழுமக்கள்

E - தனிப்பட்டவர்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த பயன்படுகின்றது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

31) சிவில் சமூகம்

A - சிவில் சமூகம் தொடர்பான கருத்துருவாக்கம் அரசறிவியலுக்குப் புதியதொரு வகை

B - 15ம் ஆண்டு நூற்றாண்டு காலப்பகுதிக்குரிய ஓர் பழமை எண்ணக்கரு.

C - *Civili Society* என்ற ஆங்கில சொல்லானது *Societas civilis* என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பிறந்ததாகும்.

D - இது இயற்கையானதும் அரசுக்கு முக்கியத்துவமான ஓர் சமூக அமைப்பு.

E - ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி போன்றவற்றுள் எதிர்க்கணியத் தொடர்பு கொண்டது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE



Scanned with CamScanner

21) சமஷ்டி ஆட்சி முறைக்கு பொருந்தாதது
(1) வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமை காணல்
(2) இருமட்டங்களில் அரசாங்கம் நடைபெறல்
(3) பல்லின சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமானது
(4) பிரஜைகள் இரு அரசாங்கங்களுக்கு கீழ்ப்பட்டிருத்தல்
(5) ஒரே மையத்தில் சகல அதிகாரங்களும் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்

22) ஒற்றையாட்சி முறையின் இயல்புகளில் அடங்காதது
(1) ஒரே ஒரு மத்திய அரசு மாத்திரம் உண்டு.
(2) சட்டத்துறை பெரும்பாலும் ஓரங்க மன்றம்.
(3) பிரஜை மத்திய அரசுக்கு மாத்திரம் கட்டுப்பட்டவை.
(4) முழு நாட்டிற்கும் தனி நிர்வாக முறை.
(5) மத்திய அரசாங்கம் பிராந்திய அரசுக்கு அதிகாரத்தை வழங்குகின்றது.

23) பிரதிநிதித்துவம்
(1) தற்கால அரசுகளில் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான வழி
(2) ஒரு நிறுவனத்தின் சார்பில் அல்லது ஒருவர் சார்பில் ஆஜராகுதல்
(3) இங்கிலாந்து பாராளுமன்ற வளர்ச்சியோடு விருத்தியடைந்த ஒன்று
(4) தற்காலத்தில் நேரடி ஜனநாயகப் பிரதிநிதித்துவம் சாத்தியமானது.
(5) தற்காலத்தில் நேரில் ஜனநாயகமே அதிக நாடுகளில் நடைமுறையிலுள்ளது.

24) எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவம்
(1) ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைந்த தேர்தல் முறை
(2) தனிக் கட்சிப் போக்கிற்கு உகந்தது.
(3) பலம் வாய்ந்த அரசாங்கம் தோன்றுவதற்கான வாய்ப்பு.
(4) பலம் வாய்ந்த அரசியல் கட்சி தோன்றுவதற்கான வாய்ப்பு.
(5) ஜனநாயகத்தின் திறமை செயல்பாடு.

agaram.lk

25) விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
(1) ஜனநாயக கோட்பாட்டை நிலை நிறுத்தும் நோக்குடையது.
(2) பொதுஜன அபிப்பிராயத்திற்கு ஆபத்தை அளிக்கின்றது.
(3) மக்கள் அரசியலில் பங்குபற்றுகின்ற சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
(4) மக்களின் மாற்றுச் சிந்தனைக்குச் சந்தர்ப்பம் வழங்குகின்றது.
(5) உறுதியான பலமாக எதிர்க்கட்சி தோன்ற வழி வகுத்தல்

❖ **26 - 35 வரையிலான வினாக்களில் மிகப் பொருத்தமான சேர்மானத் தொகுதியை இனங்காண்க.**

26) நேரடி ஜனநாயகம்
A - அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் பிரசைகள் நேரடியாக பங்கேற்கப்படுகின்றன.
B - கட்டமைப்புக்களும் பணிகளும் வேறுபடுவதில்லை.
C - அரசியல் அபிவிருத்தியின் குறிகாட்டல்.
D - பன்மைத்துவ சமூகம் கொண்ட நாடுகளுக்குப் பொருத்தமற்றது.
E - சிறிய அரசுகளில் மட்டும் நடைமுறைப்படுத்த முடியும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE



Scanned with CamScanner

32) அரசியல் கலாசாரம்

A - அரசியல் பகுத்தாய்வில் அரசியல் கலாசாரம் ஒரு முக்கியமான கோட்பாடாகும்.

B - அரசியல் பகுத்தாய்வில் அரசியல் சமூகமயமாக்கலுக்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்புள்ளது.

C - அரசியல் கலாசாரம் தேசிய வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றது.

D - அரசியல் கலாசாரம் அரசியல் கொள்ளை உருவாக்கலுக்கு உதவுகின்றது.

E - ஒப்பீட்டு அரசாங்கங்கள் பற்றி கற்கை நெறியில் இதுவொரு நல்ல கருவியாகப் பயன்படுகின்றது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

33) அரசியல் வன்முறை

A - தற்காலத்தில் பல்வேறு படிவங்களில் ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்ற உலகலாவிய ரீதியிலான ஒரு தோற்றப்பாடு.

B - பல்வேறு பரிமானங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

C - அரசியல் கட்சிகளிடையேயான மோதல் நிலை

D - ஒரு பொருள் மீது அழிவினை, காணத்தினை, ஏற்படுகின்ற ஒரு வரையறுக்கப்பட்ட பல பிரயோகத்தின் வடிவம்.

E - அரசியலின் குறிப்பிட்ட நோக்கத்தினை அடைத்து கொள்வதற்குப் பயன்படுத்தும் பலப் பிரயோகம்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

34) உரிமைகளின் இயல்புகள்

A - உரிமைகள் மனிதப் பிறப்புடன் பிறந்தமை

B - உரிமைகள் சமூகத்திலிருந்து தோன்றுவதால் சமூகத்திற்கு அப்பால் உரிமைகள் இருந்தால் இயலானது.

C - உரிமைகள் சமூகத்தால் ஏற்பட்ட நியமான தனிமனித கோர்கள்

D - உரிமைகள் வரையற்றயன்று.

E - உரிமைகளை கட்டுப்பாடுடனேயே அனுபவிக்க வேண்டும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

35) சட்டம் என்பதற்கு சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.

A - இறைமை அதிகாரத்தின் அடிப்படையில் அரசாங்கத்திடம் பிறப்பிக்கப்படுகின்றது.

B - மனிதனின் வெளிவாரியான

C - பொலிஸ் மற்றும் சிவில் சேவையினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

D - அதனை மீறுவோரை தண்டிக்கின்றது.

E - சட்டம் அரசுக்கு முந்தியதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

❖ **36 - 40 வரையான வினாக்களில் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.**

36) பொதுத்துறை நிர்வாகம்

(1) அரசாங்கத்தின் செயற்பாட்டுப் பகுதியாகும்.

(2) அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் இயந்திரமாகும்.

(3) அரசாங்கத்தின் நிர்வாகத்தில் மட்டும் கவனம் செலுத்துகின்றது.

(4) அரசாங்கத்தின் நிர்வாகத்தின் ஒரு பகுதியாகும்.

(5) அரசியல் தலையீடுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

agaram.lk



Scanned with CamScanner

37) சர்வதேச அரசியலானது

(1) தேசங்களுக்கிடையிலான அரசியல் ஆகும்.

(2) சுதந்திரமான இறைமை மிக்க தேசிய அரசுகளுக்கிடையிலான அரசியல் என அழைக்கலாம்.

(3) அரசுகளுக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கும் அரசயில் ஆகும்.

(4) உலக அரசயில் என அழைப்பர்.

(5) தேசங்களின் அதிகாரப் போராட்டமாகும்.

38) மோதல்

(1) ஒன்றுக்கு ஒன்று எதிராக நடாத்தப்படுகின்ற சமூக உள்ளடக்கங்களின் எதிர்ப்புத் தன்மை

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் தம்மால் அடைய முடியாத இலக்குகளை அடைய விரும்புகின்ற போது ஏற்படுவது.

(3) ஒரேவகையான வரையறுக்கப்பட்ட வளங்களை அடைவதற்காக ஒரே நேரத்தில் இரு தரப்புக்கும் போட்டி இடும் சமூகநிலை.

(4) தம்மிடையே ஒவ்வாத இலக்கினைக் கொண்ட தரப்பினரிடையே போராட்டம்.

(5) அருமையற்ற ஒன்றிற்கு ஒரே நேரத்தில் இரு தரப்புக்கள் மோதும் நிலை.

39) பிரித்தானிய முடி

(1) அனைத்தாண்மை கொண்டவர் அன்று.

(2) மன்னரே ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்று நடாத்துகின்றார்.

(3) அனைத்து விடயங்களிலும் இவர் பெயரிலேயே நடைபெறுகின்றது.

(4) முத்தறை அதிகாரம் கொண்ட தடையற்ற நபர்.

(5) அரசியல் அச்சாணி.

40) அமெரிக்க சட்டவாக்க சபை

(1) காங்கிரஸ் என அழைக்கப்படுகின்றது.

(2) இது ஈரலையைப் போற்றுகின்றது.

(3) இதில் தெரிவானவர்களும், நியமனமானவர்களும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

(4) மேற்சபையை விட கீழ்ச்சபை அதிகமான அதிகாரங்களை தன்னுள் கொண்டுள்ளது.

(5) மாநிலங்களின் சமத்துவத்தை பிரதிபதிப்பதாக செனட்சபை அமைந்துள்ளது.

❖ **பின்வரும் கூற்றுக்கள் சரியானவையை தெரிவு செய்து 41 - 44 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - முதலாம் முறைப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமை.

B - பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டமை.

C - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை.

D - ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை.

E - கல்விகற்ற இலங்கையர்

F - உட்கட்டுமான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டமை.

G - உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் முதலில் அதிகரிக்கப்பட்டமை.

H - சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை.

I - சிவில் சேவையாளர்கள் குறைக்கப்பட்டமை.

J - அரசுக்கழகம் உருவாக்கப்பட்டமை.

K - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ தேர்தல்.

agaram.lk



Scanned with CamScanner

41) கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தில் பொருளாதார மாற்றத்தை உண்டுபன்னியவை

(1) ABC (2) BFI (3) DFG (4) EFG (5) GHI

42) மக்கலாம்(1910) அரசியல் சீர்திருத்தத்தில் ஏற்பட்டவை

(1) ABD (2) BCD (3) CFG (4) EFG (5) GHI

43) கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தில் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றம்

(1) ADI (2) BCD (3) ACG (4) BDI (5) BEG

44) டொனமூர் அரசியல் சீர்திருத்தம் தொடர்பானவை

(1) ABC (2) EFG (3) DEF (4) HIJ (5) HJK

❖ **45 - 50 வரையான வினாக்கள் தலைப்புக்கு பொருத்தமான நான்கு கூற்றுக்கள் உண்டு. பொருத்தமான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

45) பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் காலத்தில்

A - அங்கத்துவ நாடுகளுக்கிடையே பொருளாதார, கல்வித்துறையில்

B - உலகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு அதன் உயர்வு கருதி ஊக்குவித்தல் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வழிகாட்டல்.

C - பொருளாதார, அரசியல், கலாசார துறைகளில் அந்நியோன்ய ஒத்துழைப்பு வழங்கல்.

D - அங்கத்துவ நாடுகளிடையே வர்த்தகம் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவையும் பகிர்ந்து கொள்ளல்.

E - புலமைப்பரிசில்களைப் பகிர்ந்து கொள்ளல்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

46) 1972ம் ஆண்ட யாப்பின் கீழ்

A - இலங்கை ஒரு குடியரசானது

B - புதிய தேசியகீதம் தேசிய கொடியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

C - பாராளுமன்ற முறை அரசாங்கம் தொடர்ந்தும் நிலை நிறுத்தப்பட்டது.

D - *B* நிறை மன்றம் சட்டத்துறை ஸ்தாபிக்கப்பட்டது.

E - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்து நிலைநிறுத்தப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ADCE (5) EDCA

47) மாகாண சபை

A - மாகாண சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

B - மாகாண காணிக்கும் காணி அமர்வுக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

C - மாகாண விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

D - மாகாண வெளி உறவுக்கும் ஏற்றுமதிக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

E - மாகாண கல்விக்கும் கலாசாரத்திற்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

(1) ABCD (2) ABCE (3) BACE (4) BCDE (5) CABE

agaram.lk



Scanned with CamScanner

48) இலங்கையின் அரசியல் கட்சிமுறை

A - பல்கட்சி முறையானதாகும்.

B - இருகட்சி முறையானதாகும்.

C - காடர் காட்சிகளை மட்டும் கொண்டுள்ளது.

D - தனிக்கட்சி முறையானதாகும்.

E - ஒருகட்சி ஆதிக்கமுடைய பலகட்சி முறையானதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ADCE

49) தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பு

A - சார்க் என்பதாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

B - இதன் ஆரம்ப கர்த்தலாகுள் றகுமான் ஆவார்.

C - 1985 டிசம்பர் 08ம் திகதி வங்களாதேசத்தின் தலைநகரில் ஆரம்பமாகியது.

D - பிரித்தானிய காலணித்துவத்திலிருந்து சுதந்திர நாடுகளை பெற்றுக்கொண்டுள்ளது.

E - தெற்காசிய பிராந்திய ஒருவகையான கூட்டுறவு அமைப்பே சாரிக்காகும்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ADCE

50) பொதுநலவாயத்தின் நோக்கங்கள்

A - அங்கத்துவ நாடுகளுக்கிடையே பொருளாதார, கல்வித்துறையில்

B - உலகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு அதன் உயர்வு கருதி ஊக்குவித்தல் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வழிகாட்டல்.

C - பொருளாதார, அரசியல், கலாசார துறைகளில் அந்நியோன்ய ஒத்துழைப்பு வழங்கல்.

D - அங்கத்துவ நாடுகளிடையே வர்த்தகம் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவையும் பகிர்ந்து கொள்ளல்.

E - புலமைப்பரிசில்களைப் பகிர்ந்து கொள்ளல்.

(1) ABCD (2) BCDE (3) ACDE (4) ABDE (5) ABCE

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | அரசியல் விஞ்ஞானம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ இவ்வினாப்பத்திரம் A, B, C என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது.

## பகுதி - A

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

01) அரசறிவியல் ஒரு சமூக விஞ்ஞானம் என்பதை நியாயப்படுத்தும் இரு கருத்துக்களைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

02) அரசை சமூகத்தில் இருந்து வேறுபடுத்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

03) முறைமைப் பகுப்பாய்வு அணுகு முறையில் உள்ள இரு உப அணுகுமுறைகளைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

04) “இளவரசன்” என்ற நூலினதும் “சிவில்” அரசாங்கம் பற்றிய இரு ஒப்பந்தங்கள் என்ற நூலினதும் ஆசிரியர்கள் இருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

05) அரசியல் சமுதாயப்படுத்தும் முகவர்களில் இரு முகவர்களின் பெயரினைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

agaram.lk

06) தற்கால உலகில் தாராள ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் 3 அரசாங்க முறை காணப்படுகின்றது. அவற்றில் இரு பெயர்களைக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

07) சட்டத்துக்கு மனிதன் அடிபணிவதற்கான காரணிகள் 2 ஐக் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

08) சிவில்சேவை, பொலிஸ்சேவை, அரசியல் அமைப்பு, வலுவேறாக்கம் ஆகியவற்றை பின்வருவன வற்றிற்கு எடுத்துக்காட்டாக எழுதுக.

1) அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல்

........................................................................................................................................

........................................................................................................................................

2) அதிகாரத்தைப் பிரயோகிக்கும் கருவிகள்

........................................................................................................................................

........................................................................................................................................

09) அதிகாரப் பகிர்வினை இரு வழிகளில் மேற்கொள்ளலாம். அவை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்விரு பகுதியையும் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................



Scanned with CamScanner

10) மோதல்களின் கட்டங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

11) அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொன்று தருக.

..........................................................................................

..........................................................................................

12) கோல்புறூக் சட்டமன்ற உறுப்பினர்கள் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வகைகளையும் உறுப்பினர்களின் எண்ணிக்கைகளையும் தருக.

..........................................................................................

..........................................................................................

13) தேசிய அரசுப் பேரவையினர் அரசியல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும் பின்வரும் மசோதாக்களுக்கு பதில் கூற வேண்டிய கால எல்லை

சாதாரண மசோதா

அவசர கால மசோதா

14) 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் நடைமுறையில் உள்ள இரு சுதேச மொழிகள் எவை?

..........................................................................................

..........................................................................................

15) உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கையைத் தருக.

..........................................................................................

..........................................................................................

16) அரசியலமைப்பு பேரவை, பாராளுமன்றப் பேரவை என்பன கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பையும் சீர்திருத்தங்களையும் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

agaram.lk

17) 1978ம் ஆண்டு அரசியலின் பின் கீழ் அரசியல் அமைப்பினை விபரணம் செய்வதற்கும் தடுப்பாணை பிறப்பிப்பதற்குமான நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ள இரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

18) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியரங்கத்தில் தீர்மானம் எடுப்பதில் ஈடுபடும் இரு உயர் ஸ்தாபனங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

19) அனிசேரா அமைப்பைத் தோற்றுவித்த ஆசியாக் கண்டத்தை சேர்ந்த இரு தலைவர்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

20) தற்போதைய பொதுநலவாயத்தின் தலைவரையும், இனி பொதுநலவாய மகாநாடு நடைபெறுப்போகும் ஆண்டையும் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

(1 × 20 = 20 புள்ளிகள்)



Scanned with CamScanner

➢ இவ் வினாப்பத்திரத்தில் *B*, *C* பகுதிகளில் இருந்து இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி - B

❖ விரும்பிய இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

(01) அ) அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

ஆ) அரசியல் விஞ்ஞானம் ஒரு விஞ்ஞானம் அன்று என்ற கருத்துப் பற்றி விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

(02) பின்வருவனவற்றின் இரண்டினைப் பரிசீலிக்குக.

அ) தாராண்மை வாதத்தில் தனி மனிதனின் நிலை

ஆ) பாசிசக் கோட்பாட்டில் தனி மனிதனின் நிலை

இ) அரசியல் யாப்பின் வகிபாங்கு

ஈ) நீதித்துறை சுதந்திரம்

(2 × 10 = 20 புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு பற்றிக் கருத்துரைக்குக.

அ) சமஸ்டி வாதத்தின் நிறைகளும் குறைகளும்

ஆ) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் நிறைகளும் குறைகளும்

இ) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் நிறைகளும் குறைகளும்

ஈ) பாராளுமன்ற அரசாங்க முறையின் நிறைகளும் குறைகளும்

(2 × 10 = 20 புள்ளிகள்)

(04) பின்வருவனவற்றுள் இரண்டினை ஆராய்க.

அ) ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியின் தெரிவு முறை

ஆ) பிரித்தானிய பாராளுமன்றத்தின் உயர் தன்மை

இ) சுவிஸ்லாந்தின் சமஸ்டி முறை

ஈ) இந்திய சமஷ்டி முறை

(2 × 10 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

## பகுதி - C

❖ விரும்பிய இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

01) 1833 கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்கள் இலங்கையின் பழைய யுகத்தின் முடிவினை குறித்து நின்றதோடு ஒரு புதிய யுகத்தை ஆரம்பித்து வைத்தது. நீர் உடன்படுவீரா? உமது விடைகளைத் தருக. (20 புள்ளிகள்)

02) இலங்கை தேசிய காங்கிரசுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றை எழுதுக.

தலைமைத்துவத்தின் இயல்பு

நோக்கங்கள்

நோக்கங்களை அடைய கையாண்ட வழிமுறைகள்

போதுமக்களின் பங்கேற்பு (20 புள்ளிகள்)

03) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி பரிசீலிக்குக.

அ) டொனமூரின் சர்வசன வாக்குரிமையின் நிறைகளும் குறைகளும்

ஆ) சோல்பரி அரசியல் யாப்பின் பாராளுமன்றத்தின் அமைப்பும் அதிகாரமும்

இ) 72ம் ஆண்டு அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள்

ஈ) 72ம் ஆண்டு அரசியல் யாப்பின் பெயரளவு நிர்வாகியும் அவரது அதிகாரங்களும் பணிகளும் (2 × 10 = 20 புள்ளிகள்)

04) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி பரிசீலிக்குக.

அ) 78ம் ஆண்டு ஜனாதிபதியின் தெரிவும் அதிகாரமும்

ஆ) பாராளுமன்றத்திற்கான நிர்வாக ஆணையாளர்

இ) 18 ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் அரசியல் அமைப்பு பேரவையின் அதிகாரங்களும் பணிகளும்

ஈ) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் அதிகாரங்களும் பணிகளும்

உ) சார்க்கமைப்பின் நோக்கங்கள் (2 × 10 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

| அரசியல் விஞ்ஞானம் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## அரசியல் விஞ்ஞானம் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 1 | 11) | 1 | 21) | 5 | 31) | 1 | 41) | 2 |
| 02) | 3 | 12) | 3 | 22) | 5 | 32) | 3 | 42) | 3 |
| 03) | 4 | 13) | 2 | 23) | 5 | 33) | 4 | 43) | 4 |
| 04) | 1 | 14) | 5 | 24) | 2 | 34) | 5 | 44) | 5 |
| 05) | 5 | 15) | 1 | 25) | 2 | 35) | 2 | 45) | 3 |
| 06) | 1 | 16) | 5 | 26) | 5 | 36) | 4 | 46) | 3 |
| 07) | 1 | 17) | 3 | 27) | 1 | 37) | 3 | 47) | 2 |
| 08) | 2 | 18) | 2 | 28) | 3 | 38) | 5 | 48) | 3 |
| 09) | 3 | 19) | 5 | 29) | 1 | 39) | 5 | 49) | 5 |
| 10) | 4 | 20) | 1 | 30) | 1 | 40) | 4 | 50) | 2 |

(50 × 2 = 100 புள்ளிகள்)

## அரசியல் விஞ்ஞானம் - II

### பகுதி - A

01) i) மனித நடத்தைகளை ஆய்வு செய்வது
ii) ஆய்வுக்காக பரிசோதனை கூற்றை பயன்படுத்துவது இல்லை
iii) முடிவுகளில் நிச்சயமற்ற தன்மை

02) i) அரசு செயற்கையானது, சமூகம் இயற்கையானது
ii) சமூகம் முன் தோன்றியது, அரசு பின் தோன்றியது
iii) அரசு நிரந்தரமான அமைப்பு, சமூகம் நிரந்தரமற்றது
iv) அரசு சட்டத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகம் மரபுகள் விழுமியங்கள் ஒழுங்கமைக்கப்பட்டது.
v) அரசு இறைமை அதிகாரம் உடையது. சமூகம் அதிகாரம் அற்றது.

03) i) உள்ளீட்டு வெளியீட்டு பகுப்பாய்வு முறை
ii) கட்டமைப்பு பணி பகுப்பாய்வு முறை

04) i) நிக்கலோ மாக்கியவல்லி - இளவரசன்
ii) சிவில் அரசாங்கம் பற்றிய இரு - ஜோன்லொக் ஒப்பந்தம்

05) கல்வி நிறுவனங்கள்
மத நிறுவனங்கள்
கட்சிகள்
அமுக்கக்குழு
சிவில் சமூகம்
நண்பர் குழாம்

06) i) ஜனாதிபதித்துவ அரசாங்க முறை
ii) பாராளுமன்ற அரசாங்க முறை
iii) பாராளுமன்ற முறைசார்ந்த ஜனாதிபதித்துவ அரசாங்க முறை



agaram.lk
Scanned with CamScanner

07) i) சட்டம் என்பது சட்டபூர்வமானது என்ற நம்பிக்கை
ii) சட்டம் பெறுநன்மையை நோக்காகக் கொண்டு பிறப்பிக்கப்படுகிறது.
iii) தண்டனை மீதான பயம்
iv) சமூக அபவாதத்திற்கு உட்பட விரும்பாமை
v) சட்டம் இன்றி ஒரு சிறப்பான சமூகச் சூழலை ஏற்படுத்த முடியாது
vi) சட்டம் மனிதனின் வெளிநடத்தையைக் கட்டுப்படுத்துவது

08) 1) அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல்
அரசியல் அமைப்பு
வலு வேறாக்கம்
2) அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்
சிவில் சேவை
பொலிஸ் சேவை

09) 1) பணி ரீதியான அதிகாரப் பகிர்வு
2) பிரதேச ரீதியான அதிகாரப் பகிர்வு

10) 1) அரச மோதல்
2) அரசுகளுக்கிடையிலான மோதல்
3) வீட்டு மோதல்

11) 1) அரச நிறுவனங்கள்
ஐக்கியநாடுகள் சபை
சார்க்
பொதுநலவாயம்
2) சர்வதேச செஞ்சிலுவை சங்கம்
சர்வதேச மன்னிப்பு சபை
சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில்

12) 1) உத்தியோக சார்புடையோர் - 9
2) உத்தியோக சார்பற்றோர் - 6

13) 1) சாதாரண மசோதா 2 கிழமை 4 நாட்கள்
2) அவசர மசோதா - 24 மணித்தியாலம் 1 நாள்

14) 1) சிங்கள மொழி
2) தமிழ்மொழி

15) 1) உயர்நீதிமன்றம் - பிரதம நீதியரசர் உட்பட 6 - 10
2) மேன்முறையீட்டு நீதிமன்றம் - பிரதமர் உட்பட 6 - 11

16) 1) அரசியலமைப்பு பேரவை 1719 சீர்திருத்தம்
2) பாராளுமன்ற பேரவை 18ம் சீர்திருத்தம்

17) 1) உயர் நீதிமன்றம்
2) மேன்முறையீட்டு நீதிமன்றம்

18) 1) அரச தலைவர்களின் உச்சி மகாநாடு
2) வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாடு

19) 1) இந்தியட ஜவர்கல்லால் நேரு
2) இலங்கை S.R.W.D பண்டாரநாயக்கா

20)
1917ம் ஆண்டு.



agaram.lk
Scanned with CamScanner

பகுதி - B

❖ விரும்பிய இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

01) அ) அறிமுகம் → பொதுவானது இவ்வளவு என்பதனை திட்டவட்டமாக வரையறை செய்ய முடியாது. காலத்திற்கு காலம் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கு இவ் பாடப்பரப்பினை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- ✶ அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள்
- ✶ அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கோட்பாடுகள்
- ✶ அரசாங்க நிறுவனங்கள் பற்றிய ஆய்வு
- ✶ சட்டம் மற்றும் அமைப்புச் சட்டங்கள் பற்றிய கற்கை
- ✶ பொதுத்துறை நிர்வாகம் மற்றும் ஒப்பீட்டு பொதுத்துறை நிர்வாகம்
- ✶ பொதுத்துறைக் கொள்கை முகாமைத்துவம்
- ✶ சர்வதேச பிராந்திய அரசியல்
- ✶ தேசிய அரசாங்கம்
- ✶ ஒப்பீட்டு அரசாங்கம்
- ✶ உள்ளூராட்சி
- ✶ மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்த்தலும்
- ✶ அரசியல் சமூகவியல்

2ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் வளர்ச்சியடைந்த நடத்தைவாத கற்கை முறையோடு மேலும் பல பாடப்பரப்புக்கள் வளர்ச்சி அடைந்தன. முறைமைப் பகுப்பாய்வு, அரசியல் நடத்தை, அரசியல் அதிகாரம், அரசியல் சமுதாயமாக்கல், அரசியல் பங்குபற்றுதல், அரசியல் நவீனத்தவம், அரசியல் அபிவிருத்தி, அரசியல் உயர்ந்தோர் குழாம்.

அரசியல் விஞ்ஞானம் இயங்கு தன்மை பொருந்திய பாடமாக இருப்பதோடு அதன் பாடப்பரப்பு நாளாந்தம் வளர்ச்சி அடைந்து வருவதால் அது பற்றிய பொதுமைப்படுத்தப்பட்ட அந்த வரையறையையும் இட முடியாது.

"Political Science a dynamic subject and
field of ifs grows Every day"

agaram.lk

ஆ) அரசியல் விஞ்ஞானத்தை முற்றுமுழுதாக விஞ்ஞானம் என்று ஒரு சில சிந்தனையாளர் அரசியல் விஞ்ஞானம் முற்றுமுழுதான விஞ்ஞானம் அல்ல. இது விஞ்ஞானத் தன்மையே கூடிய சபை எனவும் வாதாடும் அறிஞர்களும் உள்ளனர். இந்த வகையில் அரசியலை விஞ்ஞானம் என வாதிடுவோர் கருத்துக்களாவன.

- ✶ அவதானம்
- ✶ தகவல்கள், தரவுகள் தேடல்
- ✶ பகுப்பாய்வு செய்து ஒழுங்கமைத்தல்
- ✶ எதிர்வுகூறல்
- ✶ ஓரளவு நிச்சயத் தன்மையான முடிவுகள்
- ✶ சில விடயங்கள் பொதுமைப்படுத்தப்படல்

விஞ்ஞானம் அல்ல அது விஞ்ஞானம் சார்ந்த சமூக விஞ்ஞானம் எனக் கூறுவேன். பரிசோதனைக் கூடத்தை பயன்படுத்துவது இல்லை. மனித நடத்தைகளைப் பற்றி ஆராய்தல் 100% அமைவதில்லை. முடிவுகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

1ம் மன்ற உறுப்பினர்கள் நிலப்பரப்பு, சனத்தொகை அடிப்படையில் பிரதேச தேர்தல் முறைமூலம் 95 பேரும், 06 பேரை மகாதேசாதிபதி பிரதமரின் நியமனம்.

செனட்சபையில் 30 உறுப்பினரும் 15 பேர் பிரதமரின் ஆலோசனையில் மகாதேசாதிபதியாகும் மிகுதி 15 பேரும் பிரதிநிதிகள் சபையால் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி உறுப்பினராலும் தெரிவு செய்யப்படுவர்.



Scanned with CamScanner

அதிகாரம்

i. இருசபையும் சாதாரண சட்டங்களை ஆக்கும்
ii. நிதிமசோதாவை !ம் மன்றம் மாத்திரம் ஆக்கும்.
iii. சாதாரண மசோதாவை 06 மாத காலத்திற்கு நிதி மசோதாவை 01 மாத காலத்திற்கும் செனட்சபை காலதாமதப்படுத்தும்.
iv. இரு சபைகளினாலும் ஆக்கப்படும் சட்ட மூலங்கள் மாறி மாறி ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
v. சட்டங்கள் ஆக்கும் போது அரசியல் யாப்பின் 29 ஆத்து (2) கவனத்தில் கொள்ளப்படல்.
vi. ஆக்கப்பட்ட சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொண்டால் பிரித்தானிய முடியின் ஒப்புதலுடன் மகாதேசாதிபதியின் கையெழுத்துடன் சட்டமாகும்.
vii. சட்ட மூலங்கள் பிரித்தானிய கோமறைக் கழகத்தால் நீதிப்புனராய்வு செய்யப்படும்.

02) அ) 1) தாராண்மை வாதத்தில் தனி மனிதனின் நிலையானது தனித்தன்மை வாய்ந்தது.
2) மக்களுக்கான அரசு ஒழிய அரசுக்காக மக்களல்ல
3) தனிமனித சுதந்திரம், உரிமை, சமத்துவம் என்பவற்றை அனுபவிக்க வாய்ப்புக்கள் உண்டு.
4) ஒவ்வொரு தனிமனிதனதும் ஆளுமை, திறமை, அறிவு, அனுபவம் என்பவற்றை வர்க்க அரசு தன்னிலான பணிகளை ஆற்றும்.

ஆ) அரசுக்காக மக்கள் ஒழிய மக்களுக்காக அரசல்ல
1) பாசிச அரசில் தனிமனிதன் தனித்தன்மை மிக்கவனாக கருதப்படமாட்டான்.
2) சுதந்திரம், உரிமை, சமத்துவம் என்பன வரையறைக்கு உட்பட்டது
3) ஒவ்வொரு மனிதனதும் ஆளுமை. திறன் அறிவு என்பன அரசின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைய வேண்டும்.
4) பாஸிஸ அரசில் மனிதன் பலியிடப்படுகின்றான்.

இ) அரசியல் யாப்பின் வகிபாங்கு
1) அரசியல் முறைமையின் இயல்பு அரசியல் யாப்பின் மூலம் வெளிப்படுத்தப்படல்
2) அரசாங்கத்தின் இயல்பை வெளிப்படுத்தல்
3) பிரஜைகளின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல்
4) அரசுக்கு அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கையை வழங்குதல்
5) நாட்டிற்கு அரசியல் உறுதிப்பாட்டை வழங்கல்

agaram.lk

ஈ) நீதித்துறை சுதந்திரம்
i. அரசாங்கத்தின் கட்டமைப்புக்களில் ஒன்று
ii. நீதித்துறை சுதந்திரம் என்பது சட்டத்துறை நிர்வாகத்துறை என்பன எவ்வித தொடர்பையும் நீதிமன்றத்தின் மீது செலுத்தாமையாகும்.

நீதித்துறை சுதந்திரம் நியமனம்
தொழில் பாதுகாப்பு என்ற அடிப்படையில்
- உயர்நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் சிபார்சின் பெயரில் நடைபெறல்
- உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பதவிக்கால வயது 65
- எக்காரணம் கொண்டும் சம்பளம் குறைக்கப்படாது.
- இவர்களுடைய சம்பளம் பாராளுமன்றத்தில் திரட்டு நிதியில் இருந்து வழங்கப்படும்.
- மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் பதவிக்காலம் 63 வயதாகும்.
- ஜனாதிபதியின் எழுத்து மூல அனுமதியின்றி வேறு எந்தத் தொழிலையும் செய்ய முடியாது.
- நீதிபதிகளை பதவிநீக்கம் செய்யப்பட வேண்டுமாயின் இவர்களுக்கு எதிரான தீர்மானம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும்.
- மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்.



Scanned with CamScanner

03) அ) சமஸ்டி வாதத்தின் நிறைகளும் குறைகளும்

இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் அடிப்படையில் அரசாங்கம் ஒற்றையாட்சி சமஷ்டி ஆட்சி என பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் அதிகாரம் பங்கீட்டின் அடிப்படையில் சமஷ்டி ஆட்சி என்பது மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரம் பிரிக்கப்படும் முறையாகும்.

சாதகமான பண்புகள்

- வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமை காணப்படல்
- மத்திய அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடும் அதிகாரக் குவிப்பும் தவிர்க்கப்படும்.
- ஒரு பெரிய நிலப்பரப்புடைய சனத்தொகை அதிகமுள்ள நாடுகளுக்கு பொருத்தமானது.
- பல்தன்மையுடைய தமக்கேயுரிய இருப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியாத பலவீன அரசுகளின் இருப்பை உறுதி செய்ய முடிகிறது.
- சுயாட்சி, தனிநபர் சுதந்திரம், கூட்டுச் சௌபாக்கியம் என்பவற்றை நிலைநிறுத்த முடியும்.
- அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு உகந்த அரசாங்க முறையாக காணப்படுதல்.

பாதக பண்புகள்

- அதிகாரம் தொடர்பாக மத்திய மாநில அரசுகளுக்கிடையே மோதல் முற்படலாம்.
- அதிக செலவுகள் ஏற்படலாம்.
- முழு நாட்டிற்கும் ஒருமைப்பாடான நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாது.
- மத்திய அரசு பலமானதாக அமைவதால் மாநில அரசுக்கும் உரிமைகளுக்கும் சுயாட்சிக்கும் பாதிப்பு ஏற்படலாம்.
- வெற்றிகரமான அரசாங்க கொள்கைகளையும் வெளிநாட்டுக் கொள்கையையும் ஏற்படுத்திச் செயற்படுத்த முடியாமை.
- மாநிலங்களுக்கு அதிக சலுகைகளும் உரிமைகளும் வழங்கும் போது கூட்டாட்சி கலைந்து போகும். உ+ம் :- சோவியத் கூட்டாட்சி 1980ல் உடைவுற்றமை.

ஆ) விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் நிறைகள்

- ✱ அதிகபட்சமாக ஜனநாயகத் தன்மை வாய்ந்த தெரிவு முறை
- ✱ சிறிய கட்சிகளும் ஆசனங்களைப் பெறுவதற்கு இத் தெரிவுமுறை இடமளிக்கிறது.
- ✱ சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்தவர்கள் கனிசமான ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்கு இந்த முறை உதவுகிறது.
- ✱ சாதாரண மக்கள் அரசியல் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கு இந்த தேர்தல் முறை உதவுகிறது.
- ✱ இடைத்தேர்தல்கள் இன்மையினால் ஒப்பீட்டு ரீதியில் செலவீனங்கள் குறைவு
- ✱ புதிய கட்சிகள் தோற்றம் பெறவும் சிறிய கட்சிகள் பலம் பெறவும் உதவுகின்றது.
- ✱ மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் எல்லா வகையான அபிப்பிராயமும் அரசியல் அரங்கிற்கு கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் தீமைகள்

- ✱ தனித்து போட்டியிட விரும்புகின்ற ஒரு வேட்பாளர் தனித்து போட்டியிடுவதற்கு இந்த தேர்தல் முறைமை இடமளிப்பதில்லை.
- ✱ வாக்களிப்பு முறை கடினமானது
- ✱ ஆசனங்கள் பல கட்சிகளுக்கிடையே பங்கிடப்படுவதால் உறுதியான அரசாங்கம் ஒன்றினை உருவாக்குவது கடினமாகும்.
- ✱ தேர்தல் தொகுதிகள் விசாலமானதாக இருப்பதால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் வேலைப்பழு அதிகரிக்க வாய்ப்பு உண்டு.
- ✱ தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தமது பொறுப்புக்களில் இருந்து விலகிக் கொள்ள வாய்ப்புண்டு.
- ✱ தெரிவு செய்யப்படும் வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையே தொடர்பு குறைவாகக் காணப்படும்.

agaram.lk



Scanned with CamScanner

இ) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் நிறைகளும் குறைகளும்

நிறைகள்

* உறுதியான அரசாங்கம்
* வினைத்திறன் மிக்க அரசாங்கம்
* பலகட்சி முறை நாடுகளுக்கு ஏற்றது.
* நெருக்கடி நிலைக்கு ஏற்றது.
* காலதாமதம் ஏற்பட மாட்டாது.
* பல்லின சமூகத்தின் உரிமைகளுக்கு உகந்தது.
* வலுவேறாக்கம் காணப்படும்.

குறைகள்

* சர்வதிகாரப் போக்குக் காணப்படும்.
* பொறுப்புக்கூறும் அரசாங்க முறை அன்று
* சட்ட நிர்வாகத்துறையின் முரண்பாடு சமூகமான நிலையை பாதிப்படையச் செய்யும்.
* அரசாங்கத்தை நல்வழிப்படுத்த எதிர்க்கட்சிகள் கிடையாது.

ஈ) பாராளுமன்ற அரசாங்க முறையின் நன்மை / தீமை

நன்மைகள்

* அரசாங்கத்தின் சீரான இயக்கத்திற்கு வழிகாட்டும்.
* தன்னிச்சையான ஆட்சி கட்டுப்படுத்தப்படும்
* ஜனநாயகத் தன்மை கூடியது
* கூட்டுப் பொறுப்பு
* பலம்வாய்ந்த ஆளும் கட்சி எதிர்க்கட்சி காணப்படும்.

தீமைகள்

* அரசாங்கம் உறுதியற்றது
* வலுப்பிரிவினை கிடையாது.
* அமைச்சரவை சர்வதிகாரமாக தொழிற்படலாம்
* காலதாமதம் ஏற்படும்
* இடைத் தேர்தல் நடைபெறுவதால் செலவு ஏற்படும்.

04) அ) ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியின் தெரிவு முறை

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியை தெரிவு செய்வது தேர்தல். ஜனாதிபதி தேர்தலுக்கான ஐந்து கட்டங்கள் பின்பற்றப்படுகின்றது.

சட்டம் I : வேட்பாளரின் தகைமை, வேட்புமனுவை பதிவு செய்தல், கட்சி வேட்பாளர்களை நியமித்தல்

சட்டம் II : வேட்பாளர் திணைக்களத்துக்கு வேட்பாளர் பட்டியல் அனுப்புதல்

சட்டம் III : தேர்தல் கல்லூரிக்கான உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறை

சட்டம் IV : வேட்பாளர்கள் தேர்தல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்

அதிகாரம்

சட்டத்துறை அதிகாரம்

நிர்வாகத்துறை அதிகாரம்

நீதித்துறை அதிகாரம்

ஆ) பிரித்தானிய பாராளுமன்றத்தின் உயர் தன்மை

பிரித்தானிய பாராளுமன்றம் ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாதே தவிர ஏனைய எல்லா நடவடிக்கைகளும் இறைமைத் தன்மைமிக்கதாகும்.



agaram.lk

Scanned with CamScanner

பிரித்தானிய பாராளுமன்றம் இரு சபைகளாலும் பொதுமக்கள் சபை பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபை சாதாரண மசோதா தொடக்கம் நிதி மசோதா வரை சட்டமாக்கலாம். பிரபுக்கள் நீதி அதிகாரத்தை பெற்ற உயர் நிறுவனமாகும்.

பிரித்தானிய பாராளுமன்ற இறைமைத் தன்மை கூடியது என்பதனை பின்வருமாறு குறிப்பிடலாம்.

பொது மக்கள் சபை 545 உறுப்பினர்களையும், பிரபுக்கள் சபை 777 உறுப்பினர்களையும் உடையது. பொதுமக்கள் சபை 5 வருட பதவிக்காலத்தை கொண்டிருக்க பிரபுக்கள் சபை நிரந்தர அமைப்பாகும்.

பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு சமமானதோ அல்லது அதன் அதிகாரத்திற்கு சவால் விடக்கூடிய எந்த அதிகாரமும் காணப்படுவதில்லை.

பாராளுமன்றம் எந்தவொரு சட்டத்தையும் ஆக்குவதற்கும் நடைமுறையிலுள்ள எந்தவொரு சட்டத்தையும் இரத்துச் செய்யும் அதிகாரம் காணப்படுகின்றமை.

பாராளுமன்றம் பிறப்பிக்கும் சட்டங்களை எந்தவொரு நீதிமன்றினதும் முன்னிலையில் சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாது.

பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்தினை கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களை பிறப்பிப்பதற்கு பாராளுமன்றினால் முடியாது.

மக்கள் விரும்பாத பெரும்பாண்மையான சட்டங்களை பாராளுமன்றம் ஆக்குகின்றது. ஆனால் சமூகத்தில் விரும்பாத சட்டங்களை அது பிறப்பிக்கப்பட மாட்டாது.

இ) சுவிஸ்லாந்தின் சமஸ்டி முறை
சமஷ்டிப் பேரவை எனும் சட்டத்துறை இரட்டை மன்றமாக காணப்பட்டமை

i. தேசிய சபை
ii. மாநிலங்கள் சபை

சுவிஸ்லாந்தின் கூட்டு நிறைவேற்றுத்துறையே சமஷ்டி முறைக்கு ஆணிவேராகும். இந்த அடிப்படையில் சுவிஸ் பாராளுமன்றம் தேசிய சபை என அழைக்கப்படும் 1ம் மன்றம், 2ம் மன்றம் மானிலங்களின் அவை.

1ம் மன்றம் 200 உறுப்பினர்கள்
மாநிலங்களின் அவை 46 உறுப்பினர்கள்

சமஷ்டி முறையின் அதிகாரம்

1. மாநில அரசுக்கு வேரான அதிகாரம் மத்திய அரசுக்கு வேறான அதிகாரம் எஞ்சிய அதிகாரம் மாநிலங்களுக்கு உரியது.
2. அதிகாரத்தை செயற்படுத்தும் போது பிரச்சினைகள் ஏற்பட்டால் அதனை தீர்க்கும் பொறுப்பு சமஷ்டி பேரவைக்கு உரியது.
3. மாநிலங்கள் தமது அதிகாரத்தை செயற்படுத்துவதில் சுயாதீனமாகச் செயற்படுத்த முடியாது.
4. மாநில அரசுகள் தீர்மானம் மேற்கொள்ளும் போது மக்கள் கருத்துக்களை கோருவதற்கு நேரடி முறைகளை பிரயோகிக்க முடியும்.
5. கல்வி, செய்திக் கட்டுப்பாடு, பெருந்தெருக்கள், கைத்தொழில், வங்கி என்பன தொடர்பாக இரு அவைகளுக்கும் அதிகாரம் உண்டு. மேற்கூறியவற்றில் முரண்பாடுகள் ஏற்பட்டால் மத்திய அரசின் செல்வாக்கு வெற்றி பெறும்.

ஈ) இந்திய சமஷ்டி முறை
இந்திய சமஷ்டி முறையானது அரைகுறை சமஷ்டி முறையினைக் கொண்டதாகும்.

1. பாராளுமன்றமானது லோக்சபை, இராஸ்ய சபை என இரு சபைகளைக் கொண்டது.
2. 1ம் மன்றம் லோக்சபை 2ம் மன்றம் இராஸ்யசபை
   1ம் மன்றத்தின் உறுப்பினர்கள் 545 பேர்
   2ம் மன்றத்தின் உறுப்பினர்கள் 250 பேர்



agaram.lk
Scanned with CamScanner

3. அதிகாரங்கள் மத்திய அரசுக்கு வேறான அதிகாரங்கள் மாநில அரசுக்கு வேறான அதிகாரங்கள் எஞ்சிய அதிகாரங்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய அதிகாரங்கள் மீண்டும் மத்திய அரசிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. அமெரிக்கா, சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளில் அரசியலமைப்புக்களை திருத்தும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் சாதாரண சட்டங்களின் மூலம் மாநில விடயங்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த மத்திய அரசினால் முடியும்.

5. ஒரு மாநிலத்தை முற்றாக இல்லாமல் செய்யவும் இரண்டு மாநிலங்களை ஒன்றாக இணைக்கவும். மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

6. மாநிலங்களின் ஆளுநர் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்படுகிறார். அமெரிக்கா, சுவிஸ் போன்ற நாடுகளில் உள்ளது போன்று ஒரு பிரஜை இரட்டை வாக்குரிமையைப் பெறாமல் இந்தியக் குடியுரிமை மாத்திரம் உண்டு.

7. இந்தியாவில் நிதி வசதிகளுக்காக மாநில அரசுகள் மத்திய அரசைச் சார்ந்துள்ளன. அத்துடன் மாநிலங்கள் பிரிந்து செல்வதற்கு அதிகாரம் படைத்தவர்கள் இல்லை.

## பகுதி - C

01) கோல்புறூக் கமரூன் சீர்திருத்தங்கள் பழைய யுகத்தின் முடிவினை பின்வருமாறு மாற்றமடைந்துள்ளது.

I. தேசாதிபதியின் சர்வதிகாரப் போக்கு

* சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்களை தேசாதிபதி பெற்றிருந்தமை
* நீதித்துறையின் சர்வதிகாரப் போக்கு
  விசாரணை இன்றி சிறைப்படுத்தல், நாடுகடத்தல்
* சிவில் விடயங்களுக்கு தலைமை தாங்கியமை
* குற்றவியல் நீதி விடயத்தின் தனி அதிகாரம்
* மனிதனின் சம்பளத்தை தன்னிச்சைப்படி மாற்றி அமைத்தல்

புதிய யுகத்தில் மாற்றியமைக்கப்பட்டமை

* சிறைப்படுத்தவும் நாடு கடத்தவும் உள்ள அதிகாரம் இல்லாது அழிக்கப்பட்டமை
* இராஜகாரிய முறை, ஏகபோக வர்த்தக உரிமை இல்லாது ஒழிக்கப்பட்டு மக்களின் வாழ்க்கை மற்றும் செல்வம் சேகரிக்கும் வழிமுறை மீது தேஷாதிபதிக்கு இருந்த அதிகாரம் குறைக்கப்பட்டமை.
* சட்ட நிருபண சபை, சட்ட ஆக்க சபை மூலம் அதிகாரம் குறைக்கப்பட்டமை.
* தேசாதிபதியின் சர்வாதிகாரப் போக்கு கட்டுப்படுத்தப்பட்டமைபாராளுமன்ற ஆட்சி முறையினை தோற்றுவிக்க அடித்தளமிடப்பட்டமை

II. பழைய யுகத்தின் 3 நிர்வாக முறைகள் ஏற்படுத்தப்பட்டதால் ஒரு பிரதேச மக்களை இன்னொரு பிரதேச மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தியது. இதற்காக ஏற்கனவே பிரிக்கப்பட்டு இருந்த 16 மாகாணங்களை 5 மாகாணங்களாக குறைத்து முழு இலங்கைக்கும் ஒரு பொது நிர்வாக முறையை உருவாக்கியமை

III. பழைய யுகத்தில் காணப்படாத பொது நீதிமுறை புதிய யுகத்தில் கொண்டு வரப்பட்டமை

i. கரைநாட்டு, மலைநாட்டு மாகாணங்களை மையமாகக் கொண்டு 2 வேறுபட்ட நீதிமுறை உருவாகியமை

ii. கரையோர மாகாணங்களில் சிவில், நீதி விடயத்தில் தேஷாதிபதிக்கிருந்த அதிகாரம்

iii. கரையோர பிரதேஷத்தில் குற்றவியல், நீதி விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் கீழும் நிலவியமை.

IV. மலைநாட்டுப் பிரதேசத்தில் சிவில் குற்றவியல் நீதி விடயம் தேஷாதிபதியிடம் காணப்பட்டமை.

மேற்கூறிய விடயங்கள் இல்லாது ஒழுக்கப்பட்டு கோல்புறூக் சீர்திருத்தத்தில்



agaram.lk
Scanned with CamScanner

i. தனியான ஒரு நீதிமுறை ஸ்தாபிக்கப்பட்மை.

ii. ஐரோப்பியர் தொடர்பாக அதுவரை காலமும் உயர் நீதிமன்றம் பின்பற்றிய புறம்பான சிவில் நீதி மன்றமுறை இல்லாது ஒழிக்கப்பட்டமை.

iii. ஐரோப்பியரும் இலங்கையரும் ஒரு தனி நீதி முறைக்கு உட்படுத்தப்பட்டமை.

iv. புதிய யுகத்தில் வர்த்தக முறைகளுக்கு தளமிடப்பட்டமை

1. இராஜகாரிய முறை சொந்துடமையை ஏற்படுத்தியமையால் மகக்ள் தம் சாதிக்குரிய தொழிலை செய்ய முடியவில்லை. மனிதனை நிலத்துடன் கட்டி வைக்கும் நிலை காணப்பட்டமை.

2. புதிய யுகத்தின் இராஜகாரிய முறை இல்லாது ஒழிக்கப்பட்டமையால் வர்த்தக நடவடிக்கை விருத்தியடைந்தமை

3. மானிய முறையிலிருந்து வர்த்தக முறைக்கு மாற்றியது.

v. 1. ஆங்கிலக் கல்வி புதிய யுகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டமையால் தேசிய உளர்குழாம் வகுப்பினர் உலகில் இடம்பெறும் மாற்றத்தில் அக்கறை செலுத்தியமை

2. ஐரோப்பியரின் கருத்துக்கள் ஊடாக தமது கருத்துக்களை ஒருமுகப்படுதத்தியமை

3. அரசாங்க அதிகாரங்களை ஐரோப்பியரிடமிருந்து இலங்கைக்கு மாற்றியமை.

02) தலைமைத்துவம் இரு பகுதியினைக் கொண்டது

i. ஆங்கிலக் கல்வியை கற்றதோடு பிரித்தானிய கலாச்சாரத்தை ஏற்றவர்கள்

ii. ஆங்கிலக் கல்வியை கற்றதோடு பிரித்தானிய கலாசாரத்தை எதிர்த்து சுதேச கலாசாரத்தை விரும்பியமை

iii. உயர்சாதியினர் பணம்படைத்தோர் சொத்துடையோர், கல்வி அறிவுடையோர்

iv. இரு சாராரும் ஆயுத பாவனையை எதிர்த்தவர்கள்

agaram.lk

தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

i. பிரித்தானியாவை ஏகாதிபத்தியத்தின் கீழ் உள்ளூர் சுய ஆட்சியை பெறல்

ii. யாப்பு சீர்திருத்தத்தை பெறலும் அதற்கான நடவடிக்கைகளும்

iii. உள்ளூர் அரசாங்க முறையை இலங்கை பூராகவும் பரவலாக்கல்

iv. மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் வரிமுறையை சீர்செய்தல்

v. 14 வயதிற்கு உட்பட்ட சகலருக்கும் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தியமை

vi. விஞ்ஞான, தொழில்நுட்ப, விவசாய, வர்த்தக கல்வியை விருத்தி செய்தமை

vii. இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியமை

நோக்கங்களை அடைய கையாண்ட வழிமுறைகள்

i. கூட்டங்களை நடாத்துதல்

ii. பேரம் பேசுதல்

iii. தீர்மானங்களை முன்வைத்தல்

iv. மனுக்களை அனுப்புதல்

v. கலந்துரையாடல்களை நடாத்துதல்

vi. வேண்டுகோள் விடுத்தல்

vii. தூதுக்குழுக்களை அனுப்புதல்

viii. சாட்சிய மாற்றல்



Scanned with CamScanner

பொதுமக்களின் பங்கேற்பு

தேசிய காங்கிரஸ் என்பது பொதுமக்கள் பங்கேற்பை பெற்றிருக்க வேண்டும். ஆனால்

i. தலைமைத்துவம், சங்கத்துவம், வெகுஜன பங்குகளை பெறவில்லை.

ii. நோக்கங்கள் குறுகியதும், உயர்வர்க்கத்துடன் தொடர்புபட்டதும்.

iii. உயர்குழாமினரின் ஆதிக்கம் மிகைத்துள்ளமை

iv. கடைப்பிடித்த உபாயமும் மக்கள் பங்கேற்பை பெறுவதில் தோல்வி கண்டிருந்தமை

03) அ) டொனமூரின் சர்வசன வாக்குரிமையின் நிறைகளும் குறைகளும்

i. சர்வசன வாக்குரிமை 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் எவ்வித வேறுபாடும் இன்றி வயதின் அடிப்படையில் வழங்கப்படல்

ii. வாக்காளர் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரிக்கப்பட்டமை.

iii. பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்பட்டமை.

iv. பொறுப்புக்கூறும் அரசாங்கம் பழக்கப்படுதல்

v. சமூக மாற்றம் துரிதம் அடைதல்

vi. பொதுநலன்பேன் அரசாங்க முறை தோற்றம் பெற்றமை

vii. அரசறிவியல் வளர்ச்சியடைந்தமை

viii. அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றமை

ix. தொழில் சங்கங்கள் தோற்றம் பெற்றமை

x. பத்திரிகைத் தொழில் விருத்தயடைந்தமை

தீமைகள்

i. வறிய நாடுகளுக்கு பொருத்தமற்றது

ii. இலங்கை போன்ற பெரும்பான்மை / சிறுபான்மை இனத்துக்குப் பொருத்தமற்றது.

iii. தொடர்ந்தும் வஞ்சம், ஊழல் அதிகரிக்கப்படல்

ஆ) சோல்பரி அரசியல் யாப்பின் பாராளுமன்றத்தின் அமைப்பும் அதிகாரமும்

i. இருசபைகளைக் கொண்டது
பிரதிநிதிகள் சபை
செனட்சபை

ii. பிரதிநிதிகள் சபை 1ம் மன்றம் எனவும், கீழ்ச்சபை எனவும் அழைக்கப்படும். செனட் சபை மேற்சபை எனவும், 2ம் மன்றம் எனவும் அழைக்கப்படும்.

iii. 1ம் மன்றம் 101 உறுப்பினர்களையும் பதவிக்காலம் 02 வருடத்தையும் கொண்டது. 2ம் மன்றம் 30 உறுப்பினர்களையும் 06 வருடத்தை பதவிக்காலமாகவும் கொண்டது. எனினும் 02 வருடத்துக்கு இரு முறை $\frac{1}{3}$ பகுதி உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் அதே அளவு உறுப்பினர் பின் தெரிவு செய்யப்படுவார்.

இ) 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள்

1. யாப்பின் புதிய அம்சம்
2. யாப்பின் 6 வது அத்தியாயம் 18(1) உபபிரிவு
3. i) சட்டத்தின் முன் சமன்
   ii) சட்டப் பிரகாரம் இன்றி உயிருக்கோ சுதந்திரத்துக்கோ தனிப்பட்ட பாதுகாப்பிற்கோ தீங்கு ஏற்படாது இருத்தல் வேண்டும்.
4. சட்டப்படியின்றி கைது செய்யப்படவோ சிறையில் அடைக்கப்படவோ கூடாது
5. சிந்தனை, சமய, மனசாட்சி சுதந்திரம்
   கலாச்சார சுதந்திரம்
   ஒன்றுகூடல் சங்கம் அமைத்தல்
   பேச்சு சுதந்திரம், கருத்து வெளியீட்டு சுதந்திரம்



agaram.lk
Scanned with CamScanner

6. சிவில் அரசியல் உரிமைகள் மட்டும் உண்டு
   பொருளாதார உரிமையில்லை
7. 18.2 சரத்துக்கு கட்டுப்படல்
8. உரிமை மீறப்படும் போது நீதித்துறையில் நியாயம் கோர முடியாது.

ஈ) 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் பெயரளவு நிர்வாகி
1. ஜனாதிபதி
2. பிரதமரின் நியமனம்
3. பதவிக்காலம் 4 வருடம் (இடைக்காலத்தில் பதவி நீக்கப்படலாம்)
4. 1 வது ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ
5. சம்பளம் தேசிய அரசுப் பேரவையால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியின் மீது பொறுப்பாக்கப்பட்டது.
6. தலைவர் :- அரசின் முப்படைகளின் / நிறைவேற்று துறையின்
7. அதிகாரம் :- சட்ட, நிர்வாக, நீதித்துறை
8. தேசிய அரசுப் பேரவையில் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து $\frac{2}{3}$ பெரும்பாண்மையுடன் நிறைவேற்றல்

04) அ) 1978ம் ஆண்டு ஜனாதிபதியின் தெரிவும் அதிகாரமும்

தகமைகள்
1. 30 வயது பூர்த்தி
2. 2 தடவை ஜனாதிபதியாக இருந்தவர் போட்டியிட முடியாது
3. பதவிக்காலம் 05 வருடங்கள்
4. இலங்கை பிரஜை
5. கட்சி உறுப்பினர் or பாராளுமன்ற உறுப்பினர்.

தெரிவு
* விகிதாசாரம் பிரதிநிதித்துவ முறையில் தனிமாற்று வாக்குமுறை
* 2 பேர் போட்டியிட்டால் 1 விருப்பு வாக்கு
* 2 க்கு மேல் போட்டியிட்டால் 3 விருப்பு வாக்கு
* அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 50% க்கு மேல் பெறல்
* குறைவாகப் பெற்றால் 50% குறைந்த ஆகக் கூடுதலான வாக்குப் பெற்ற இருவர்களை தவிர ஏனையோரை போட்டியிலிருந்து நீக்கம் செய்தல்
* போட்டியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் தவிர தெரிவு செய்யப்பட்ட இருவருள் கிடைத்த 2ம், 3ம் வாக்குகளுடன் கூட்டி 50% மேல் பெற்ற ஒருவரை தெரிவு செய்தல்
* இருவரும் சமனாக பெற்றால் திருவுளச்சீட்டு மூலம் தெரிதல்
* ஒருமாத காலத்துக்குள் பிரதம நீதியரசர் முன்நிலையில் சத்தியப் பிரமாணம் செய்தல்.

அதிகாரம்
* சட்டத்துறை
* நீதித்துறை
* நிர்வாகத்துறை
* ஏனைய அதிகாரம்

ஆ) ஓம்புட்ஸ்மன் / நிர்வாக ஆணையாளர்
- மனித உரிமைகள் பாதுகாக்கும் பதவிப் பெயர்
- ஜனாதிபதியினால் நியமனம்
- அரசியல் யாப்பின் 156 பந்தியின் 02வது உபபிரிவு
- பதவிக்காலம் 05 வருடம் எனினும் நன்னடத்தை உடையவர் எனின் தொடர்ந்து இருப்பார்.



agaram.lk
Scanned with CamScanner

* செயற்பாடு
அரச இலாகாக்கள் கூட்டுத் தாபனங்கள், உள்ளூர் ஆட்சி மன்றங்கள் வேறு அரச நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் அதிகாரி or அதிகாரங்கள், இழைக்கும் அநீதிகள் தொடர்பாக விசாரணை செய்வார்.

1981ம் ஆண்டின் 17ம் இலக்க பாராளுமன்றச் சட்டம் ஓம்புட்ஸ்மின் பதவியின் செயற்பாடு
1. மக்கள் தமது பிரதேச உறுப்பினருடாக விண்ணப்பக் குழுவிற்கு முறைப்பாட்டை சமர்ப்பித்தமை
2. அக்குழு தீர்மானித்தால் மட்டுமே குற்றச் சாட்டுக்கள் விசாரிப்பதற்கு ஓம்புட்ஸ்மன்னுக்கு அனுப்பப்படும்.

1994 க்கு பின் முறைப்பாடு செய்யும் முறை மாற்றி அமைக்கப்பட்டது
1. பொதுமக்கள் எழுத்துமூலமான முறைப்பாடுகளை நேரடியாக ஓம்புட்ஸ்மன்னுக்கு அனுப்புதல்.
2. ஓர் தலைமை ஓம்புட்ஸ்மன் மற்றும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு ஓம்புட்ஸ்மன்

குற்றச்சாட்டுடன் தொடர்புடையவரை நேரடியாக விசாரிக்காது அவர் பற்றிய தகவல்களை இரகசியமான முறையில் எடுத்தபின் அவரை நேரடியாக விசாரித்தல்.

இ) 18 ஆவது சீர்திருத்தமும் பாராளுமன்ற பேரவையும் அதிகாரங்களும்
1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் 18 வது திருத்தமூடு பாராளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டது.
05 உறுப்பினர்களைக் கொண்டது
பிரதமர்
சபாநாயகர்
எதிர்கட்சித் தலைவர்
பிரதமரால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்
எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிக்காலம் 06 வருடங்கள்

அதிகாரம்
உயர் ஆணைக்குழுக்கள் தலைவர்கள் உட்பட ஏனைய உறுப்பினர்கள் நீதித்துறைப் பதவிகள் ஓம்புட்ஸ்மன் பாராளுமன்ற செயலாளர் நாயகம் போன்ற பதவிகளுக்கு ஜனாதிபதி நியமனம் செய்யும் பொது பாராளுமன்ற பேரவையின் அவதானிப்பினை கருத்தில் கொள்ள வேண்டும்.

சில சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் தானே முடிவு எடுப்பார். ஒரு வாரத்தில் பாராளுமன்றம் பேரவை முடிவினை செய்யாது விட்டால் பயன்படுத்தப்படும்.

ஈ) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை
ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அமைப்புக்களில் ஒன்று ஐ.நா. சபையின் உறுப்புரிமை நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு
ஏறக்குறைய 194 க்கும் மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் வகுத்தமை
தீர்மானங்கள் கொண்டு வரப்படல்
பாதுகாப்பு சபைக்கு நிரந்தரமற்ற 10 உறுப்பு நாடுகளை தெரிவு செய்தல்.

உ) சார்க்கமைப்பின் நோக்கங்கள்

agaram.lk



Scanned with CamScanner